30 செப்டம்பர் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 26ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

## கிறிஸ்துவில் மற்றவர்களை மதிப்பது, உலகத்தோடு நட்புறவாடல்

# நம் மத்தியில் இருக்கும் அந்நியக் குடியேறிகளை ஒன்றிணைத்தல்

அன்பார்ந்த சகோதர-சகோதரிகளே, இன்று குடியேறிகள் ஞாயிறைக் கொண்டாடுகிறோம். இது ஒரு நாள் நிகழ்ச்சியாக இருந்து விடக்கூடாது. பரிதாபத்திற்குரிய அந்நியத் தொழிலாளர்களையும் ஏழைகளையும் சுயநலத்திற்காக பயன்படுத்துவதிலிருந்து விலகி நல்ல முதலாளிகளாக நாம் இருக்க வேண்டுமென இறைவார்த்தை அழைக்கிறது. மாற்கு 9:42 கடும் எச்சரிக்கை விடுக்கிறது. வறிய



நிலையிலுள்ள குடியேற்றக்காரர்களின் அழுக்குரலை இறைவன் கேட்கின்றார். அவர்களை கொடுமைப்படுத்துவோர் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. “உங்களுக்கு வரப்போகும் இழிநிலையை நினைத்து அலறி அழுங்கள்.” “உங்கள் வயலில் அறுவடை செய்த வேலையாள்களுக்குரிய கூலியைப் பிடித்துக் கொண்டீர்கள். அறுடை செய்தவர்களின் கூலக்குரல படைகளின் ஆண்டவருடைய செவிக்கு எட்டியுள்ளது”. (யாக்.5:1&4)

குடியேற்றக்காரர்களை வரவேற்று, பாதுகாத்து, இணைத்துக் கொள்வதோடு, நமது குடும்பம், பங்கு, சமூகம் ஆகியவற்றிலும் அவர்களை இணைத்துக் கொள்ளும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென திருச்சபை கூறுகிறது. இணைத்துக் கொள்வது என்பது தன்வயப்படுத்துதல் அல்ல. அவர்களின் சொந்த கலை-கலாச்சாரத்தை மறந்து புதிய சூழ்நிலைக்கு வசப்படுத்துவது அல்ல. மாறாக, குடியேற்றக்காரர்களும் அகதிகளும் நம்மிடையே வாழ்வதால் கலாச்சார வளத்திற்கும் மேன்மைக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்துவது இணைத்துக் கொள்வதாகும். பல்வகைப்படுவதை வளப்படுத்துவதால் இறையன்பில் ஒரே பெரிய ஐக்கியமான நாடாக நாம் வளர முடியும்.

நமது குடும்பங்களிலும் பங்கு சமூகத்திலும் குடியேற்றக்காரர்களின் வரவைக் கொண்டாடுவது இணைத்தலில் அடங்கும். அவர்களின் தனித்துவமாக கலாச்சாரத்தைக் கொண்டாடுவோம், நமது வாழ்க்கையையும் வெவ்வெறு வகையில் வளப்படுத்துவதைப் பாராட்டுவோம். நமது குடும்பமும் நாடும் முன்னேற அவர்களின் பங்களிப்புக்காக கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

நமது பங்கிற்கும் சமூகத்திற்கும் செல்லும் முன் நமது குடும்பங்களில் குடியேற்றக்காரர் இணைப்பு முயற்சி தொடங்க வேண்டும். குடியேற்றக்காரரும் குடும்பத்தில் ஒருத்தர் என்பதை உணர்த்த, குடியேற்றக்காரர் அல்லது நமது வீட்டுப் பணிப்பெண் பிறந்த நாளை, புத்தாண்டடை அல்லது திருவிழாவைக் கொண்டாடலாம். நமது குடும்ப நிகழ்ச்சிகளில் வீட்டுப் பணிப்பெண்ணையும் சேர்த்துக் கொள்ளலாம். நமது பணிப்பெண் கத்தோலிக்கராக இருந்தால் அகிச கூட்டங்களில் கலந்து கொள்ள அழைக்கலாம். வாரத்தில் குறைந்தது ஒரு நாள் விடுமுறை வழங்கலாம். இதனல் அவர்கள் தங்களது நண்பர்களையும் பிறரையும் சந்திக்க முடியும். நாள்தோறும் செபிப்பதற்கு அவர்களுக்கு ஓய்வு வழங்கலாம். மேலும் அவர்களின் சமயத்திற்கு விரோதமாக உணவை உட்கொள்வதைத் தவிர்க்கலாம். பங்கு வாழ்க்கையில் அவர்கள் முழுமையாக பங்கு கொள்ள அகிச அல்லது பங்கு அழைக்கலாம். ✝

> ஒவ்வொருவரையும், அவரது பிண்ணனி எதுவாக இருந்தாலும் வரவேற்கும் நல்ல மனது உங்களிடம் இருக்கட்டும்.
>
> - திருத்தந்தை 16ம் பெனடிக்

**வாரம் ஒரு வசனம்**

இணைத்துக் கொள்வது என்பது தன்வயப்படுத்துதல் அல்ல.

INTERNAL CIRCULATION ONLY
BUL39/2018

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

Print: Stenoprint Sdn Bhd
Design: The Mustard Seed Studio

# மினவுதல் மாதா தேவாலயம்

85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 அக்டோபர் (ஐப்பசி) மாதத்தின் கருப்பொருள்:*
***நான் எல்லைகளைத் தாண்டி கிறிஸ்துவில் பயணிக்கிறேன்***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 26ஆம் ஞாயிறு** சனி 29-09-2018 - ஞாயிறு 07-10-2018

எண்: 11: 25 - 29 தி.பா: 18: 8, 10, 12 - 13, 14 யாக்கோபு: 5: 1 - 6 மாற்கு: 9: 38 - 43, 47 - 48

**" ஆண்டவரின் நியமங்கள் சரியானவை, இதயத்தை மகிழ்விக்கின்றன" - திபா 18**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 29 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(வின்செண்ட் டி போல்) | விவிலியக் கல்வி (Bible Knowledge) : மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 30 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (குடியேற்றவாசிகள்)<br>திருப்பலி (ஆ) (புனித பேணர்ட்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 01 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 02 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 03 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 04 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 05 | காலை திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (ஆ) முதல் வெள்ளிக்கிழமை*** |

**பொதுக்காலம் 27ஆம் ஞாயிறு**

தொ.நூ: 2: 18 - 24 தி.பா: 127: 1-2, 3, 4-5, 6 எபிரேயர்: 2: 9 - 11 மாற்கு: 10: 2 - 16 (10: 2-12)

**"உம் வாழ்நாளெல்லாம் ஆண்டவர் உமக்கு ஆசி வழங்குவாராக" - திபா 127**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 06 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(வின்செண்ட் டி போல்) | விவிலியக் கல்வி (Bible Knowledge) : மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 07 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித ஹிலாரி)<br>திருப்பலி (ஆ) (புனித கல்கத்தாவின் திரேசா)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2018 அக்டோபர் (ஐப்பசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

i) **ஆலய காணிக்கை**
22/23 செப்டம்பர் ரிம: 10,687.15
**அனைத்து தாராள உள்ளங்களையும் இறைவன் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!**

ii) அதிச புருனோ 1 & 2 காலை உணவு விற்பனை செய்கிறார்கள் (07-10-2018) காலை 7.00 - 12.00 (பகல்) வாங்கி ஆதரவு தாருங்கள்.

திருமண அருளடையாளக் கொண்டாட்டம்:
அ) ஜோன் சின் & இசபெல் யார் 13-10-2018 காலை 11.00 (தித்தி)
ஆ) ரிச்சர்ட் சந்திரன் & பரமேஸ்வரி 13-10-2018 மாலை 3.30

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்**
அ) ரோஸ் லீ யென் (இறப்பு: 21-09=-18)
ஆ) மரினா கேட் (இறப்பு: 25-09-2018)
இ) பிலோமினா இருதயம் (இறப்பு: 27-09-2018)
**முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!**

➢ இரத்த தானப்பிரச்சாரம்: புனித மாற்கு தேவாலயம், (ஆங்கிலிக்கன் சபை) நாள்: 06-10-2018(சனி) காலை 10.00 - 3.00 (பகல்) வரை. இடம்: ஜோசுவா சமூக மையம் (JCC) சிரம்பான் ஜெயா: தொடர்புக்கு: அருள்திரு டேவிட் லோ (016-826 2555 / ஆன் (017-6568515)

➢ வெஸ்லி மெத்தோடிஸ் பள்ளி, சிரம்பான் கிறிஸ்துவ பள்ளி தங்களுடைய பள்ளியின் 2019 ஆம் ஆண்டின் புதிய மாணவர் சேர்க்கைக்காக விளம்பரம் செய்ய வருகை தருகிறார்கள். (படிவம் 1-4 வரை)

➢ உலக முதியோர் தின கொண்டாட்டம் ( 65 வயதுக்கு மேல்)
நாள்: 30-09-2018 (ஞாயிறு) புனித யோசேப்பு ஆலயம், கோலாலம்பூர்
நேரம்: 5.30 நவநாள் - புனித யோசேப்பு மற்றும் அன்னை மரியாளுக்கு நவநாள், நற்கருணை ஆசீர்
மாலை 6.00 மணிக்கு திருப்பலி மற்றும் ஒன்றுகூடல்

இன்று திருப்பலியை வழிநடத்திய
குடியேற்றவாசிகளுக்கு நமது நன்றிகள்

➢ **குடியேற்றவாசிகளின் ஞாயிறு: 30-09-2018** பகல் 1.00 மணிக்கு திருப்பலி அதன்பின் ஒன்றுகூடல்
- 24 மணி நேர நற்கருணை ஆராதனை: மினவுதல் தேவாலய பார்லரில் நடைபெறும். - 29-09-2018 (சனி) பகல் 3.00 முதல் 30-09-2018 (ஞாயிறு) பகல் 3.00 வரை
- ஒரு குடியேற்ற சகோதர சகோதரியையாவது சந்தித்து அறிமுகப்படுத்திகொள்ளுங்கள்.
- அவர்களின் பெயரை நினைவில் வைத்து அவருக்காக செபியுங்கள்.
- பகல் 1.00 மணிக்கு திருப்பலியில் கலந்துகொள்ளுங்கள்
- திருப்பலிக்குப் பின் நடைபெறும் விருந்துபசரிப்பில் கலந்துகொள்ளுங்கள்.

குடியேற்றவாசிகள் மற்றும் அகதிகளுக்கு நாம் இணைந்து செய்ய வேண்டிய மறுமொழி கீழ்க்கண்ட நான்கு செயல்களில் வெளிப்படுத்தப்படுகிறது (திருத்தந்தை பிரான்சிஸ்)
- வரவேற்றல்
- பாதுகாத்தல்
- ஊக்குவித்தல்
- ஒருங்கிணைத்தல்

➢ **ஏழைகளுக்கான பணிக்குழு** (ஏழைகளின் திருச்சபை ஏழைகளுக்கானது- திருத்தந்தை பிரான்சிஸ்)
- 22/23 செப்டம்பர் பணிக்குழுவை நியமித்து அதனுடைய குழு உறுப்பினர்களை ஆசீர்வதித்தல்
- மருத்துவ முகாம் 14-10-2018
- ஆன்மீக உரை - "ஏழைகளின் திருச்சபை" வழங்குபவர்: அருள்பணியாளர் சேவியர் - 03-11-2018 (பங்கு மக்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம்)
- உலக ஏழைகளின் நாள்: 17 ,18 நவம்பர் 2018
- கூடுதல் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள : ஸ்டீபன் டயோனிஸ் அப்பு (016-611 0681)

➢ நானும் என்னுடைய அதிச வும் ( அதிச வுக்கு முதலில் முக்கியத்துவம் தருதல். பணிக்குழுவிற்குப் பின்னர்)
- என்னுடைய அதிச வில் நானும் ஓர் அங்கமாக இருக்கிறேனா? என்னுடைய பயணம்?
- அதிச மாதாந்திர சிந்தனைத் தாள் ஒன்றுகூடலைப் பற்றித் தெரியுமா? அதில் நான் கலந்துகொள்கின்றேனா?
- செபம் ஒன்றுகூடலைத் தவிர வேறென்ன வெளிப்புற நடவடிக்கைகளில் நான் பங்கெடுக்கிறேன்? தர்மகாரிங்கள் மற்றும் பல. எவ்வாறு
- அதிச வில் உள்ள இல்லங்களைச் சந்திக்கின்றேனா?
- அதிச /வட்டார பொறுப்பாளர்கள் அதிச ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களின் முழுமையாகப் பங்கெடுக்கின்றனரா?

➢ **புதிய உரோமைத் திருப்பலி நூல் ஓர் அறிமுகம்** : நெகிரி செம்பிலான் மாநில அளவில் நடைபெறவுள்ளது. காலம்: 13-10-2018 (சனி) மாலை 4.00 - 7.30 மணிவரை இடம்: மினவுதல் மாதா தேவாலய மண்டபம் தொடர்புக்கு : டேவிட் அல்லிமுத்து 013 932 6747

➢ **170 ஆம் ஆண்டு நிறைவுவிழா** - கார்னர் ஸ்டோன் "காஃபி டேபிள் புத்தகம் விலை: ரிம:40.00 மட்டுமே. அனைத்து திருப்பலிகளுக்குப் பின்னும் மற்றும் பங்கு அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

➢ **அக்டோபர் - செபமாலை மாதம்** : அனைத்து அதிச வில் உள்ள ஒவ்வொரு இல்லங்களிலும் செயற்படுத்தவும், ஒவ்வொருவரையும் இதில் கலந்துகொள்ள அழைக்கவும்.

➢ **வீட்டின் செல்லப்பிராணிகளுக்கு சிறப்பு ஆசீர்** ( புனித பிரான்சிஸ் அசிசி திருவிழா) 07-10-2018 (ஞாயிறு) மாலை 5.00 மணிக்கு மாதா கெபியின் முன் நடைபெறும்.

➢ **அனைத்துலக கடற்கரை ஓரங்களை சுத்தப்படுத்துதல்** : இடம் போர்ட்டிக்சன் கடற்கரை - சிரம்பான் மற்றும் போர்ட்டிக்சன் தன்னார்வலர்களைக் கொண்டு நடத்தப்படுகிறது. கூடுதல் விவரங்கள் விரைவில்

➢ பங்கு மேய்ப்புப்பணி பேரவை ( PPA) 21-10-2018 (ஞாயிறு) பகல் 2.00 மணி இடம்: மினவுதல் தேவாலய மண்டபம் - அனைத்து அதிச/வட்டார பொறுப்பாளர்கள் மற்றும் குழுவினர் இதில் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.